RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s22228

OPEN ACCESS

# தமிழர்களின் வழிபாட்டு மரபுகள்

**மு. கஜலட்சுமி [அ, *]**

[அ] தமிழ்த்துறை, ஸ்ரீ ஜி.வி.ஜி. விசாலாட்சி மகளிர் கல்லூரி (தன்னாட்சி), உடுமலைபேட்டை-642128, தமிழ்நாடு, இந்தியா

# Worshipping Traditions of the Tamil People

**M. Kajalaksami [a, *]**

[a] Department of Tamil, Sri. G.V.G. Visalakshi College for Women (Autonomous), Udumalpet-642128, Tamil Nadu, India

* Corresponding Author: kajalakshmi8@gmail.com

Received: 22.09.2022
Revised: 08-11-2022
Accepted: 15-11-2022
Published: 01-12-2022

Check for updates

**ABSTRACT**

In general, the traditions of worship in Tamil society can be divided into two as minor deity worship and big deity worship. The word tradition is derived from a tradition passed down from generation to generation. There are many kind of worship such as worshiping the dead ancestors, vehicle of minor deities, their weapons Nadukal deities, female deities, virgin deities, male deities and so on. Among this the appearance of minor deities, mode of following, their army, prayer, and offerings are given importance in this article. Minor deities are considered to be deities of the lay people, and the history of the minor deities have been described orally. -goddess is known as oral literature. Pujas are performed by the elders of the clan. The practice of sacrifice is also mentioned in this article. Major deity worship is about the deities in the five types of land namely Kurinji, Mullai, Marutham, Neithal and Paalai. In the major deity worship traditions, incarnations, trivia, attaining yogic status by asking for boon, attaining a house, and asking for boon in the afterlife are prominent. These deities are worshipped when there is division between love and valor, when the hero separates the heroine and for the protection of hero. This worship has also been explored through religious texts and chants and pujas. Knowledgeable peoples, siddhars and poets worship the major deities. It has also been examined in this article that the pujas, worships and festivals are conducted for these deities. This article examines the traditions of minor and major deity worship in Tamil society, worship methods and the clans of the worshippers.

**Keywords:** Traditions, Tamil People, worship

## முன்னுரை

மனித இனம் தோன்றிய காலம் முதல் இன்று வரை பல படிநிலைகளைக் கடந்து வந்துள்ளோம். காதல், வீரம், பக்தி, இலக்கியம், விஞ்ஞானம் என்று பல வடிவங்களில் அசுர வளர்ச்சி என்றே கூறலாம். ஆனால், காட்டுமிராண்டி வாழ்க்கையிலிருந்து மனிதன் தன்னை நெறிப்படுத்திக் கொள்ளவும் உறவுமுறை வாழ்க்கையைத் தொடங்குவதற்கு முன்வரை வழிபாடு குறித்து அவன் அறிந்திருக்கவில்லை. எந்த ஒரு சக்தியை மனிதனால் எதிர்த்துப் போராட முடியாதோ அதைக் கண்டு பயந்த மனிதன் நாளடைவில் சரணடைய ஆரம்பித்தான். அதைக்கண்டு அஞ்சி வழிபடத் தொடங்கினான். இயற்கைச் சீற்றங்களுக்கு முன்பு அவனால் எதுவும் செய்ய இயலாதபோது 'வழிபாடு' என்ற ஒன்றை துவங்கினான். அன்று அவனுக்கு உயிர் வாழத் தேவையான ஒன்று உணவு மட்டுமே. காலப்போக்கில் உணவு, உடை, இருப்பிடம், கல்வி, தொழில் என்று நாகரீகம், பண்பாடு என்ற பெயரில்

மன அழுத்தத்திற்கு ஆளாகியுள்ளோம். ஆனால் வேட்டைச் சமூகம் என்பது உணவையே கடவுளாகக் கொண்டது. ஆதனால் தனக்குக் கிடைத்த உணவை தான் முதலில் உண்ணாமல் தன்னைக் காக்கும் ஏதோ ஒரு இயற்கை சக்திக்குக் கொடுத்தபின்பு உண்ணும் பழக்கம் தொடங்கியது. இதையே இன்றுவரை 'படையல்' என்று கூறி சமைத்த உணவை சுவைத்துக்கூடப் பார்க்காமல் இறைவனுக்குப் படைத்த பின்பு அதன்பின் உண்ணும் பழக்கம் வந்ததற்கு காரணம்.

## மரபு

மரபு என்பது பரம்பரை பரம்பரையாக தொன்றுதொட்டு வரும் பழக்கவழக்கங்களே மரபாகும். நம் மூதாதையர்கள் தங்கள் வாரிசுகளுக்கும், சமூகத்திற்கும் கற்றுக் கொடுத்த நல்ல கருத்துக்களும், செயல்களுமே மரபாகக் கொள்ளப்பட்டது. இவ்வாறு மரபு வழியில் தொன்றுதொட்டு வழிபாடுகள் எவ்வாறு உருவாகின என்பது குறித்து இக்கட்டுரை காணலாம்.

"ஆரியர் வருமுன்னே, தமிழர் சமயத் துறையிலும் தலைசிறந்திருந்தனர். ஆயினும், எல்லாரும் அந்நிலையடையவில்லை. எந்த நாகரிக நாட்டிலும், தலையாயார், இடையாயார், கடையாயார் என்னும் முத்திறத்தார் இருக்கவே செய்வர். ஆகவே, தமிழர் மதமும், சிறுதெய்வ வணக்கமும், பெருந்தெய்வ வழிபாடு, கடவுள் நெறி என முன்நிலைப்பட்டிருந்தது"[1] என்று ஞா.தேவநேயப் பாவாணர் கூறுகிறார் (Thevaneyap Paavaanar, 2017). சிறுதெய்வ வழிபாடு, பெருந்தெய்வ வழிபாடு என்று இரண்டு வகையாகப் பகுத்துக் கூறலாம்.

## சிறுதெய்வ வழிபாடு

நடுகல் தெய்வங்கள், இறந்த முன்னோர்கள், கன்னியாக இறந்தவர் (பெண் தெய்வங்கள்), ஆண் தெய்வங்கள் (முனி, கருப்பணசாமி, மதுரைவீரன், அய்யனார்), சிறு தெய்வங்களின் வாகனங்கள் (நாய், குதிரை, பாம்பு), இயற்கை வழிபாடு (பஞ்சபூதங்கள்), என்று பகுத்துக் கூறலாம்.

## சிறுதெய்வ வழிபாடுகள்

நாட்டுப்புற மக்களின் வாழ்க்கையோடு ஒன்றாகக் கலந்தது தெய்வ வழிபாடாகும் (Rajendran, 2003). இத்தெய்வ வழிபாட்டின் தோற்றம் பழமையுடையது. உணவை மட்டுமே தேடி அலைந்த மனிதன் பயத்தின் அடிப்படையிலும் எதிர்க்க முடியாத இயற்கை சீற்றத்தின் அடிப்படையிலும் பக்தி தோன்றியது எனலாம். தன்னுடைய பரம்பரையை வளர்த்த தன் முன்னோர்களையும் தெய்வங்களாக வழிபடத் தொடங்கினான். கன்னிப்பெண்களாக இறந்தவர்கள், குழந்தைகளாக இறந்தவர்கள், வயதாகி இறந்தவர்கள் இவர்களையும் வழிபடத் தொடங்கினர். சிறுதெய்வ வழிபாட்டு மரபுகளை இடத்திற்கு இடம் மாறுபடும்.

## சிறு தெய்வங்கள்

குலதெய்வம், ஊர் தெய்வம், காவல் தெய்வம், பெண் தெய்வம் என சிறு தெய்வங்களை பிரிக்கலாம். நாட்டுப்புற மக்கள் பரம்பரைபரம்பரையாக தொன்றுதொட்டு மரபு வழியில் தம் மூதாதையர்கள் வழிபட்ட முறைப்படி வழிபடுதலே சிறு தெய்வ அல்லது குலதெய்வ வழிபாடாகும். இதையே அடிப்படையாகக் கொண்டு படையல், வேண்டுதல், நேர்த்திக்கடன், பலியிடுதல், நோயின்றி வாழ வேண்டுதல் வைத்தல், காணிக்கை செலுத்துதல் என்ற அடிப்படையில் வழிபடத் தொடங்கினர்.

சிறுதெய்வங்கள் என்பது பெரும்பாலும் உருவச்சிலை கிடையாது. கல், பிடிமண், மண் உருவம் என்ற வழிபாட்டு முறையே இங்கு பின்பற்றப்படும். அந்தந்த இனத்தைச் சார்ந்த அல்லது குலத்தைச் சார்ந்த மூத்தவர்கள் அல்லது குடும்பத்தில் மூத்தவர்களே இந்த வழிபாட்டு முறைகளை வழிநடத்துவர்.

பூசை செய்யும் உரிமைகளும் அவர்களுக்கே வழங்கப்பட்டது. இதை அடுத்தடுத்த வாரிசுகள் தொடர்ந்து கடைபிடித்தனர். பிற குடும்ப உறுப்பினர்கள் இதை ஏற்றுக் கொண்டு ஒற்றுமையுடன் வழிபட்டனர்.

## வழிபாட்டு மரபு வகை

ராபர்ட் ரெட்ஃபீல்டு என்பவர் வழிபாட்டு மரபை இரண்டாகக் கூறுகிறார். அவை, 1. பெரு மரபு (Great Condition), 2. சிறு மரபு (Little Condition).

### பெருமரபு

1. பள்ளிகளிலும் கோயில்களிலும் வளர்க்கப்படுகிறது. 2. சான்றோரால் நினைவு கூர்ந்தும் செப்பம் செய்யப்பட்டு வளர்க்கப்படுகிறது. 3. ஞானிகள், சமயச் சான்றோர்கள் இலக்கிய ஆசிரியர்கள் ஆகியோர் பெரு மரபைப் பின்பற்றுகின்றவர்கள். 4. நூல்களின் மூலம் வரலாற்றை அறிய முடியும். 5. பூசைகள், வழிபாடுகள், திருவிழாக்கள் குறிப்பிட்ட காலத்தின்படி நடைபெறும். 6. ஆகம விதிமுறைகள், மந்திரங்களுடன் வழிபாடு நடைபெறுகின்றன. 7. சைவப் படையல்கள் மட்டும் படைக்கப்படும். உயிர்ப்பலியிடுதல் இல்லை.

### சிறுமரபு

1. எழுத்தறிவற்ற பாமர மக்களிடம் சமுதாயத்தில் தானே தோன்றி வளர்வதாகும். 2. செப்பம் செய்யப்பட்டு வளர்க்கப்படுவதில்லை. 3. மக்களிடம் வாய்மொழி வழக்கின் மூலமே அறிந்து கொள்ள இயலும். பூசைகள், வழிபாடுகள், திருவிழாக்கள் குறிப்பிட்ட கால நிர்ணயம் இல்லை. 4. வேண்டும் போது வழிபாடு நடத்தலாம் நடத்தாமலும் இருக்கலாம். 5. தலைமுறையாகப் பின்பற்றப்படும் மரபுகளுக்கு முதன்மை தரப்படும். 6. பூசை வழிபாடுகளின் போது மந்திரங்கள் பின்பற்றுவது இல்லை. 7. உயிர்ப்பலி இடுதல் சைவ / அசைவப் படையல் படைக்கப்படும்." (Sanmugam, 2003)

## பெருந்தெய்வ வழிபாடு

ஐந்து நிலங்களில் வழிபடும் தெய்வங்களையே பெருந்தெய்வங்கள் என்று கூறப்படுகின்றன. குறிஞ்சி நிலம் கடவுளான சேயோன், முல்லைக் நிலக்கடவுளான மாயோன், பாலை நிலக்கடவுளாக காளி, மருதநிலக்கடவுளாக வேந்தன், நெய்தல் நிலக்கடவுளாக வருணன் என்று நில அடிப்படையில் வழிபடத் தொடங்கினர். இவ்வழிபாடு மக்கள் வாழ்வில் ஒழுக்கத்தை ஏற்படுத்தவும், தீமைகள் செய்யாமல் இருக்கவும், நல்ல செயல்களைச் செய்யவும் துணை நின்றது.

## வழிபாட்டு மரபுகள்

வழிபாடு என்பது வாழ்வியலில் எல்லா நிலைகளிலும் பின்னிப் பிணைந்து காணப்படுகிறது. துணைவியைப் பிரிந்து தலைவன் செல்லும் பாலை நிலத்தின் வெப்பத்தை சுட்டிக்காட்டும்போது நான்முகன் முதலாகத் தேவர் பலரும் சென்று வேண்ட கோபத்துடன் சென்று முப்புறங்களையும் எரிக்கச் சிரித்த சிவனின் முகம் போலக் கதிரவன் தீப்பிழம்பாகிச் சுடுகின்றான் என்று பாலைக்கலியில் கூறப்படுகின்றது. பிரிவைப் பற்றி நினைக்கும் போது, நிலத்தின் கொடுமை பற்றிக் கூறும்போதும் இறைவனைப் பற்றிய உணர்வு வெளிப்படுவதை உணர முடிகிறது. இதனை,

"தொடங்கற்கண் தோன்றிய முதியவன் முதலாக
அடங்காதவர் மிடல் சாய அமரர் வந்து இரத்தலின்
மடங்கல் போல் சினைஇ மாயம் செய் அவுணரை

கடந்து அடுமுன்பொடு, முக்கண்ணான் மூவெசயிலும்

உடற்றக்கால் முகம் போல்"[3] (கலித்தொகை, பாலைக்கலி, பாடல் எண்.2:1-5)

இப்பாடல் வரிகள் உணர்த்துகின்றன. தலைவன் செல்லும் பாலை நிலத்தின் வெப்பம் குறையும் வகையில் மழை பொழிய வேண்டும் என மேகத்தையும், வெப்பத்தை குறை என சூரியனையும், குளிர்ந்த காற்று வீச வேண்டி, காற்றுத் தேவனையும் தலைவனுக்காகத் தலைவி வழிபடுகிறாள். இதற்குத் தோழியானவள் உலகமே வறண்டாலும் மழையைப் பெய்விக்கும் கற்புச் சக்தி உடையவள் தலைவி என்றும், இவளுடைய பசலைக்கு அஞ்சி அறக்கடவுளே துன்பங்களை நீக்கி நிற்பார்கள் என்று கூறுவதும் வழிபாட்டு மரபினைச் சுட்டுவதாக உள்ளது. இக்கருத்தினை,

"வறன் ஓடின் வையகத்து வான் தரும் கற்பினாள்

நிறன் ஓடிச் பசப்பூந்தல் உண்டு என,

அறன் ஓடி விலங்கின்று, அவர் ஆள்வினைத் திறத்தே"[4] (கலித்தொகை, குறிஞ்சிக்கலி, பாடல் எண்.46:1-6)

என்ற பாடல் வரிகள் மூலம் அறியமுடிகிறது.

## சிறுதெய்வ வழிபாட்டின மரபுகள்

சிறு தெய்வ வழிபாடு என்பது அக்காலத்திலிருந்து இன்றுவரை கடைபிடிக்கப்பட்டு வருகின்றது. மலைகளிலும், நீர்நிலைகளிலும், மரங்களிலும், தெய்வங்கள் இருப்பதாக மக்கள் நம்பினர். மலை, நீர், மரம் இந்த இயற்கை மனித வாழ்விற்கு மிக இன்றியமையாதவை. இதை பாதுகாக்க உருவாக்கப்பட்டது தான் வழிபாடு என்றாலும், அக்கால மக்கள் தங்கள் காதல் பிரிவின் ஆற்றாமையும், தலைவன் தலைவி பாதுகாப்பு குறித்து வழிபாடு செய்யப்பட்டது. வீரத்திற்கு அடையாளமாக விளங்குவது நடுகல் வழிபாடு. போரில் வீரமரணம் அடைந்த ஒருவனுக்கே நடுகல் வழிபாடு நடைபெற்றது. இதனை தொல்காப்பியர்,

"காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்

சீர்த்தகு மரபின் பெரும்படை வாழ்த்தல்"[5] (தொல்காப்பியம், புறத். 5)

கூறுகின்றார். அதாவது சாதாரணமாகப் போரில் சென்று இறந்தவர்களுக்கு கல் நட்டனர் என்று சொல்ல முடியாது. கல்நட்டுதற்கு உரிய வீரனுடைய வீரமே ஒரு எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும். தான் ஒருவனாக நின்று அஞ்சாது எதிரிகளைக் கொன்று குவிக்கும் சிறப்பு பொருந்திய வீரனின் வீரமரணமே நடுகல் சிறப்புப் பெறுகிறது.

## குலதெய்வம்

குலத்திற்கு உரிய தெய்வம் 'குலதெய்வம்' என்றானது. குடும்பம் அல்லது அந்த இனக்குழு வழிபடும் தெய்வம் குலதெய்வம் என்றே அழைக்கப்பட்டது. இந்த வழிபாடு ஆண்வழி மரபுவழியே பின்பற்றப்பட்டு பெண் திருமணம் ஆன பின்பு தன் கணவனின் குலதெய்வமே தன் குல தெய்வமாக ஏற்று வழிபடுகின்ற முறை உள்ளது. தன் பிறந்த வீட்டு தெய்வத்தை தன் குலதெய்வம் என்று வழிபடும் வழக்கம் இங்கு இல்லை. குலதெய்வங்கள் சாதி அடிப்படையில் தன் தோற்றம் அமைந்துள்ளது. குலத்தினருக்கும் தெய்வத்திற்கும் உள்ள தொடர்பு தலைமுறை தலைமுறையாக மரபு வழியான நினைவுக் குறிப்புகளுடன் அமைந்துள்ளது.

## குலதெய்வங்களின் தோற்றம்

சில தெய்வங்கள் உருவான தோற்றம் என்பது பெரும்பாலும் ஒரே கதைகளையே கொண்டிருக்கும். குலதெய்வத்தின் கதைகள், குல தெய்வத்தின் வரலாறு, வழிபடும் முறை,

நம்பிக்கைகள், திருவிழாக்கள், பிடிமண் வைத்து வழிபடும் முறை இவற்றைக் கொண்டு அதன் வரலாறு நிர்ணயிக்கப்படுகிறது. சிறு தெய்வங்களின் பெயர்களில் சாதி அடிப்படையில் அல்லது தொழில் அடிப்படையில் இடத்திற்கு இடம் சிறு மாறுதல்களுடன் வழிபடுகின்றனர். கனவில் சொன்னதாகவும், புதையல் வடிவிலும், நிலத்தைப் பண்படுத்தும் போது கண்டு எடுக்கப்பட்டதாகவும், முன்னோர் சொன்ன கல்லில் உள்ளதாகவும் அந்த வரலாறு துவங்குகிறது. இந்த தோற்றக் கதைகள் மரபு வழியாகப் பின்பற்றப்பட்டு வருவதால் அதன் வழிபாட்டு முறைகளும் அவர்கள் பங்களிப்பும் பல படிநிலைகளுடன் எழுதாச்சட்டமாக நடைமுறைப்படுத்தப்படுகின்றன. சில தோற்றக் கதைகளைத் தங்கள் நினைவுகளுடனே கொண்டிருந்தாலும் ஆதிக்க வர்க்கத்தினரால் வழிபாடுகள் மாற்றி அமைக்கப்படுவதும் மறக்கச் செய்வதாகவும் பிரிவினருக்கும் பண்பாட்டு அடையாள உரிமை மறுப்புகளுடன் நடைபெறுகின்றன.

## குலதெய்வம் வாழுமிடங்கள்

குலதெய்வங்கள் வாழுமிடங்கள் பெரும்பாலும் வீடுகளிலும், தெருக்களிலும், காடுகளிலும் அல்லது ஊர் எல்லையிலும் அமைந்திருக்கும்.

1. இறந்த முன்னோர்கள் வாழ்வோர்க்கு நன்மை அளிப்பார்கள் என்ற நம்பிக்கையில் வழிபடுகின்றனர்.
2. அம்மை நோயினால் இறந்த குழந்தைகளை மாரியம்மனாக நினைத்து இனிவருவோருக்கு தீங்கு வராமல் பாதுகாக்கும் என்ற நம்பிக்கையில் வழிபடுகின்றனர்.
3. இறந்தோருக்கும் பிடித்தமானவற்றைப் படைத்து வழிபடுவதின் மூலம் தீமைகளிலிருந்து தம்மைக் காப்பார்கள் என்ற நம்பிக்கையில் வழிபடுகின்றனர்." ஆ.சண்முகம் அவர்கள் கூறுகின்றார் (Sanmugam, 2003).

## குலதெய்வ கோவில்களில் முக்கிய நிகழ்ச்சிகள்

குடும்பத்தில் குழந்தை பிறந்தவுடன் அதற்கு முதல் மொட்டை போடுதல், காதுகுத்துதல், பெயர் வைத்தல் ஆகிய சடங்குகள் குலதெய்வ கோவில்களிலேயே நடைபெறுகின்றன. திருமண அழைப்பிதல் முதன்முதலில் குலதெய்வக் கோயிலிலேயே வைக்கப்பட்டு தெய்வத்தின் அருள் வேண்டப்படுகிறது. வீட்டில் நிகழும் எந்தவொரு நல்ல நிகழ்ச்சியிலும் முதல் தேங்காயைக் குலதெய்வத்துக்கும், இரண்டாவது தேங்காயை பிள்ளையாருக்கு உடைத்து வழிபடுவது இன்று வரை வழக்கத்தில் உள்ளது. தன்குலத்தை வாழவைப்பதே குலதெய்வம் தான் என்ற நம்பிக்கை மரபு இங்கு உறுதியாகிறது.

## வழிபடும் முறை

வழிபடும் முறைகளில் தான் சமைத்த உணவை எச்சில்படாமல் இறந்த அல்லுத முன்னோர்கள் விரும்பி உண்ட உணவை படையலாக அளிக்கப்படுகின்றது. இதில் இனிப்புகளாக பச்சரிசி மாவுடன் சர்க்கரை அல்லது பச்சரியில் சர்க்கரை தேங்காய் கலந்தும், சர்க்கரைப் பொங்கல், கம்பு அல்லது ராகி களி அல்லது கூழ் வைக்கும் பழக்கம் இருந்தது. பொறி கடலை, அவல், கற்கண்டு, காதோலைகருகமணி, பூ, தேங்காய் பழம், எலுமிச்சம்பழம் படையலில் முக்கிய இடம்பெறும். அதுமட்டுமின்றி சில குலதெய்வம் அல்லது காவல் தெய்வங்களுக்கு பலியிட்டு படையல் வைக்கப்படுகிறது. ஆடு, கோழி, பன்றி என்று பலியிடும் வழக்கம் உள்ளது. பலியிட்டவைகளை சமைத்து அல்லது நெருப்பில் சுட்டும் படையலாக கடவுளுக்கு முதலில் கொடுக்கும் பழக்கமும், அதன்பின்பு படையலில் உள்ள கடவுளுக்கு அளித்த உணவை பிரசாதம் என்று தன் குடும்பத்தினர் அனைவருக்கும் கொடுக்கும் வழக்கமும் இன்றுவரை பின்பற்றப்படுகிறது.

## ஊர் தெய்வங்கள் அல்லது பெண் தெய்வங்கள்

ஒரு குலம் அல்லது பல குலத்தைச் சார்ந்தவர்கள் குழுவாக ஒன்றிணைந்து வழிபடுவதே ஆகும். இது ஊர்களின் அல்லது கிராம மக்களுக்கு பொதுவான தெய்வமாக அமைந்திருக்கும். இந்த ஊர் அல்லது கிராம தெய்வங்களை ஒரு குலத்தைச் சார்ந்தவர்கள் அல்லது சாதியைச் சார்ந்தவர்கள் அல்லது ஒரு குறிப்பிட்ட தொழில் செய்பவர்கள் என்று உரிமை கொண்டாட முடியாது. இத்தெய்வம் பொதுவாக அனைவராலும் கொண்டாடப்படும் தெய்வமாகும். ஊர்கூடி ஒன்றாக எந்தவித உயர் தாழ்பு இன்றி வழிபடும் மரபு முறை இந்த தெய்வ வழிபாடாகும். பெரும்பாலும் இவ்வழிபாடு பெண் தெய்வ வழிபாடாக இருக்கும். நோயிலிருந்து (அம்மை நோய்) ஊரைக் காக்கவும், வறுமையிலிருந்தும், இயற்கை சீற்றங்களிலிருந்தும், ஊர் அமைதி வேண்டியும், மழை வேண்டியும், தன் ஊர்மக்கள் நலன் கருதியும் ஒற்றுமையின் வெளிப்பாடாக இந்த வழிபாட்டு முறை அமைந்துள்ளது. பொதுவாக பேச்சியம்மன், மாரியம்மன், காளியம்மன், காத்தாயம்மன், செல்லியம்மன், வனதேவதைகள் என்று அம்மனின் இதில் பல பிரிவுகளாக வழிபடுகின்றனர். எடுத்துக்காட்டாக, காளியம்மன் என்றால், பெண் தெய்வங்களை ரெணகாளி, கன்னிமார் (எழுவர்), பத்ரகாளி, ஊர்காத்தகாளி, வயல் காத்த காளி என்று காளிகளில் பல பிரிவுகளாக வழிபடுவது போல ஒவ்வொரு ஊர்களுக்கு தகுந்தாற்போல் பிரிவுகளும் பெண்களில் சில மாற்றங்களும் இருக்கும். இக்கோவில்கள் கட்டிடங்களாக, இல்லாமல் மண்மேடை அமைத்து அல்லது கல் மேடை அமைத்து மரத்தின் கீழ், குளத்தின் கரையில், வயலின் நடுவில், கிணற்றின் மேடையில் இவ்வழிபாட்டு தளம் அமைந்து இருக்கும்.

இவ்வாறு அமைவது இயற்கை வளத்தை பாதுகாக்கவும், தூய்மையாக்கவும், வளர்க்கவும் பேருதவியாக இருக்கும். இயற்கையே மனிதனின் வாழ்வாதாரம் என்பதை இது உணர்த்தும். இவ்வாறு வழிபடுவதால் நீர்நிலைகளை தூய்மையாக வைக்கவும், மரங்களை வெட்டாமல் வளர்க்கவும், வயலை விற்காமல் பாதுகாக்கவும் செய்துள்ளனர். நிறை செம்பு தண்ணீர் வைத்தல், விளக்கேற்றுதல், சூடம் காட்டுதல், தேங்காய் உடைத்தல், மணியடித்தல், பத்தி காட்டுதல், சாம்பிராணி வைத்தல் என்று வழிபடும் மரபாகும். இவ்வாறு செய்து வழிபடும் முறையை நிறைவு செய்கின்றனர்.

## காவல் தெய்வங்கள் அல்லது ஆண் தெய்வங்கள்

காவல் தெய்வங்கள் என்பது பெரும்பாலும் ஆண் தெய்வங்களே. எல்லை தெய்வங்கள் என்று ஊரின் தொடக்கத்தில் இக்காவல் தெய்வத்தை வணங்கிய பின்பு ஊருக்குள் நுழையும்படி அமைக்கப்பட்டிருக்கும். காடுகளிலும், ஏரிகள், குளங்கள், ஊர் எல்லைப்பகுதி, மலைப்பகுதி என்று இவ்விடங்களில் ஆண் தெய்வங்கள் பெரும்பாலும் கம்பீரமான தோற்றத்துடன் வடிவமைக்கப்பட்டிருக்கும். அருவாள், வேல், கம்பு, சூலாயுதம் போன்ற ஆயுதங்களை தன் கையில் ஏந்தியிருக்கும்.

கருப்பணசாமி, முனியப்பசாமி, அய்யனார், மாயாண்டி மதுரைவீரன் போன்ற ஆண் தெய்வங்களின் பிரிவுகள் இதில் அடங்கும். எடுத்துக்காட்டாக, கருப்பணசாமி, என்றால் அதன் உட்பிரிவுகளாக, சந்தனக்கருப்பு, எல்லைக்கருப்பு, சங்கிலிக்கருப்பு, பெரிய கருப்பு, சின்னக்கருப்பு, பெரியதுரை, சின்னத்துரை, ஊமைத்துரை, வேட்டைக்கருப்பு என்று ஊர்களுக்கும் மக்களின் பண்பாட்டிற்கும் தகுந்தாற்போல் உட்பிரிவுகள் இடம்பெறும்.

## ஏழு கன்னியர் அல்லது கன்னிமார்

பராசக்தியின் அவதாரங்களாகவே வழிபடப்படுகின்றனர். கௌமாரி, வைஷ்ணவி, வராகி, இந்திராணி, சாமுண்டீஸ்வரி ஆகியோரையே கன்னிமார்கள் என்றழைப்பர். ஊரைப் பொருத்து பெயர்கள் வேறுபடும். ஆனால் ஏழு கன்னிமார்களே இடம்பெறுவர். இது குலதெய்வ வழிபாட்டில் அல்லாது ஊர் பொது தெய்வங்களில் இடம்பெரும். எல்லா குலத்து மக்களும், சாதி மற்றும் தொழில் பேதமின்றி வழிபடும் சிறு தெய்வங்களாகும். இவை ஒரே கல்லில் ஏழு கன்னி பெண் உருவம் கொண்டு இருக்கும்

அல்லது ஏழு கல்லை தனித்தனியாக வைத்து வழிபடும் வழக்கமும் உண்டு. காதோலை கருகமணி வைத்து வழிபடுவர். எலுமிச்சை, தேங்காய் பழம், பொறி கடலை, சர்க்கரை, வாழைப்பழம் வைத்து சைவ பொருட்களே படையலில் பயன்படுத்துவர்.

இவ்வாறு சிறு தெய்வ வழிபாடுகளில் வழிபாட்டு முறைகளிலும் தெய்வப் பெயர்களிலும் அவற்றின் தோற்றக் கதைகளிலும் பல தரப்படி நிலைகள் கொண்டதாக இருந்தாலும் அவற்றின் பொதுநிலை என்பது ஒன்றாகவே அமைந்துள்ளது. பழங்கால மரபுகள் பின்பற்றுதல், ஒவ்வொரு சாதிகளுக்கும் இடையிலான பழக்கவழக்கம், பண்பாடு, தொழில் அடிப்படையில் வழிபடுதல் என்று மரபுகள் பின்பற்றப்படுகின்றன.

## முடிவுரை

மக்களின் பொருளாதாரத்தின் அடிப்படையில் இடம்விட்டு இடம்பெயரும்போது இந்த பழக்கவழக்கங்கள், வழிபாட்டு முறைகள், பண்பாடுகள் மாறுபடுகின்றது. இதில் பெருந்தெய்வ வழிபாட்டின் மரபுகள், சிறு தெய்வ வழிபாட்டின் மரபுகள் பெரும்பாலும் அடிப்படை முறைகள் கடைபிடிக்கப்படுகின்றன. அரசு உதவிகளுடன் கட்டிடங்கள் அல்லது ஊர் பொதுமக்களின் வரிகள், ஊர் பெரியவர்களின் சன்மானங்களின் மூலம் கோயில்களில் கும்பாபிஷேகங்கள் நடப்பு காலத்தில் இடம்பெறுகின்றது. இவ்வழிபாடுகள் அனைத்தும் மக்களின் ஒற்றுமை, இயற்கை பாதுகாப்பு, சுகாதாரமம், நோயற்ற வாழ்வு, மழை, தொழிலை தெய்வமாக வணங்குதல், பாதுகாத்தல், பெண்களை மதித்தல், மக்களுக்கு சமமாக உணவு அளிப்பது, குலம் காக்க, உழவுத்தொழில் செழிக்க என்ற இதன் அடிப்படையில் வழிபாடும், நேர்த்திக்கடன்களும் செலுத்தப்படுகின்றன.

## References

Rajendran, R. (2003) Nattuppura Valipattu Marabukalum Nambikaikalum, Mahakavi Bharathiar Noolagam, Coimbatore, India

Sanmugam, R. (2003) Panpattu Talangal, Annam Veliyedu, Chennai, India

Thevaneyap Paavaanar, G. (2017) Pandaith Tamil Nagarimum Panpadum, Gowra Publications, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License